இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம்
(கூட்டிணைத்தல்)

**புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எட்வட் குணசேகர
அவர்களால் 2017, மே மாதம் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

(2017, ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[**178 ஆம் சட்டமூலம்**]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 11.00 **தபாற் செலவு : ரூபா 10.00**

புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்)

புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியத்தைக் கூட்டி ணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம்” என அழைக்கப் படுவதும், அறியப்படுவதுமான அமைப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நம்பிக்கை நிதியத்தோடு சொல்லப்பட்ட குறிக் கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நம்பிக்கை நிதியம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களை யும் இதுவரை சொல்லப்பட்ட கழகத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதா தலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியத்தைக் கூட்டிணைத்தல்.

2. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (இதனகத்துப்பின்னர் ‘‘நம்பிக்கை நிதியம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும், “புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம்” என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்

துப்பின்னர் ‘‘கூட்டுத்தாபனம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்திற்கான கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச் சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) புற்றுநோய் தடுப்பு - இலங்கையில் புற்றுநோயைத் தடுப்பதுடன் தொடர்புபட்ட சகல நடவடிக்கைகளையும் செய்வதற்கும் ;

(ஆ) புற்றுநோயை முன்கண்டறிதல் - முன்கூட்டியே கண்டறியக்கூடியதும் பரிசோதிக்கக்கூடியதுமான பிரதான புற்றுநோய் வகைகளில் (மார்பு, வாய் மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய்) வினைத்திறனான முன்கூட்டிக் கண்டறிதலினை செயற்படுத்துதல் ;

(இ) புற்றுநோய் சிகிச்சை முறையும் கண்டறிதலும் - குறிப்பாக குணப்படுத்தக்கூடிய புற்றுநோய்கள் அல்லது முன்கூட்டியே கண்டறியக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வினைத்திறனான புற்றுநோய் கண்டறிதலையும் சிகிச்சை முறையினையும் செயற்படுத்துதல் ;

(ஈ) நோய் தணிப்பு புற்றுநோய் பராமரிப்பு - சமூக அடிப் படையிலான மற்றும் நல்வாழ்க்கைப் பராமரிப்பு மீதான குறிப்பிட்ட நோக்குடன் புற்றுநோய்க்கான வினைத் திறனான நோய் தணிப்பு பராமரிப்பினை செயற் படுத்துதல் ;

(உ) புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நோய் தடுப்பு, முன்கூட்டிக் கண்டறிதல், புற்றுநோயெனக் கண்டறிதல், சிகிச்சை அளிப்பு மற்றும் நோய் தணிப்பு என்பனவற்றில் ஈடுபடுகின்ற தொழில்வாண்மை யாளர்கள், குடும்பங்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் ஏனைய அனுசரணை முகவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் பயிற்சியையும் கல்வியை யும் வழங்குவதற்கான வள நிலையங்களைத் தாபித்தல்;

(ஊ) புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தில் பொதுவாக, சமூக மற்றும் உள ரீதியான பொதுவான முன்னேற்றத்தில் உதவுவதற்கு;

(எ) புற்றுநோயினைத் தடுத்தல், முன்கண்டறிதல், புற்று நோய் எனக் கண்டறிதல் மற்றும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் நோய் தணிப்பு போன்றன குறித்தான பராமரிப்புச் சேவைகளை வழங்குதல் குறித்தான பொதுமக்களுக் கான அறிவூட்டல்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முன்னெடுத்தல்;

(ஏ) நம்பிக்கை நிதியத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங் களுக்கு இயைந்ததாக புற்றுநோயினால் பாதிக்கப்பட் டுள்ள வறியோர், உதவியற்றோர், அநாதைகள், விதவைகள் மற்றும் இளைஞர்கள் குறிப்பாக சிறுவர் கள் ஆகியோருக்கு உதவியளித்தல் ; அத்துடன்

(ஐ) மேலே அடையாளப்படுத்தப்பட்ட நோக்கங்களை விரிவு படுத்துவதற்காக அரசாங்கம் அல்லது ஏதேனும் நிறு வனங்களுடன் ஒருங்கிணைந்து மற்றும் ஒத்துழைத்து உடன்பட்டு பிரதிநிதித்துவப்படுத்துதல்.

அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத் தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்தல்.

4. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் இச்சட்டத்தின் 6 ஆவது பந்தியின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுவதுடன் (இதனகத்துப்பின்னர் ''சபை'' என அழைக்கப்படுவதுடன்) இச்சபையானது மேற்படி விதிகளுக் கமைய தவிசாளர் உள்ளடங்கலாக 7 பேருக்கு மேற்படாத நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருக்க வேண்டும்.

(2) முதலாம் உபபிரிவின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தவிசாளர் நம்பிக்கை நிதியத்தினுடைய தவிசாளராக இருப்பதுடன் அவர் முன்கூட்டியே பதவி விலகாத வரை ஆயுட்கால தவிசாளராக அவர் பதவி வகிப்பார்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

6. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துக்காக ஏதேனும் அசையாத ஆதனத்தை பராதீனப்படுத்துவதற்கு, பாரபந்தப் படுத்துவதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு, குத்தகைக்கு, வாடகைக்கு, அடகுக்கு, பிணையத்துக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், விற்றல் மற்றும் கொடுத்து மாற்றுதல் அல்லது வேறு விதமாக கொள்ளல், வைத்திருத்தல்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அதிகாரத்தைக் கையாள்வதிலும் அல்லது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அவசியமானவையாக காணப்படுகின்ற ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகள் போன்றவற்றில் கூட்டுத்தாபனத்தின் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது ஏதேனும் அலுவலர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ இணைந்து செயற்படல் அல்லது கொண்டு நடாத்துதல்;

(இ) பொருளாகவோ அலலது பணமாகவோ விருப்பாவணம் மற்றும் நன்கொடைகள் மற்றும் பரிசுகளை ஏற்றுக் கொள்ளல்;

(ஈ) ஏதேனும் வங்கியில் சேமிப்பு கணக்குகள் மற்றும் நடைமுறை வைப்புகளைக் கொண்டு நடாத்துவதோடு இதனுடைய நிதியை முதலிடல்;

(உ) கூட்டுத்தாபனம் அதனுடைய நோக்கத்திற்காக அது பொருத்தமானதெனக் கருதும் பட்சத்தில் பாதுகாப்புடன் கூடியவகையில் பணத்தை முதலிடுதலும் அல்லது கடனாகப் பெறுதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மை வகுக்கப்படுதலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டுவிலகுதலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும், நிதியத்தைக் கொண்டிருத்தல் மற்றும் கணக்குகளை கணக்காய்வு செய்தலும் பராமரித்தலும் ; அத்துடன்

(உ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் விவகாரங்ளை நிருவகித்தல், அதனுடைய நோக்கங்களை அடைதல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம். மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்கள் பற்றிய இடாப்பைக் கொண்டிருத்தல்.

8. சபை நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்கள் பற்றிய இடாப் பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விவரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

9. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கினால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகை யாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக் கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்க ளையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

10. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டா தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் வருமானம் செலவினம் சொத்துக் கள் மற்றும் பொறுப்புக்கள் ஏனைய எல்லா கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை கூட்டுத்தாபனம் வைத்திருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அல்லது அரசியமைப்பின் உறுப்புரை 154 இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவருமாகிய ஆளொருவர் ; அல்லது

(ஆ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில்புரிவதற்கான தகைமைச் சான்றிழைக் கொண்டிருக்கின்றவர்களுமான பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

11. (1) சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டுத் தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து சுகாதாரம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித் தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூக சேவைகள் ஒழுங்கமைப்புக்கள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும். வருடாந்த அறிக்கை.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலட்சினை.

12. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை குழுவினால் முடிவு செய்யப்படக்கூடியவாறான குழுவின் அத்தகைய பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

13. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற நிதியத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

14. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமானதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனங்களையும் பயன் படுத்துதல்.

15. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

16. (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமை களைப் பேணுதல்.

17. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

18. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்